செய்தி வெளியீடு எண் :13 நாள் :11.12.2020

**தேனி மாவட்டம்**

**மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. ஓ.பன்னீர்செல்வம் அவர்கள்**
**மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர்**
**திரு. உடுமலை கே.ராதாகிருஷ்ணன் அவர்கள் முன்னிலையில்**
**தேனி அரசு கால்நடை மருத்துவ கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்திற்கான**
**கட்டுமானப் பணிகளை துவக்கி வைத்தார்:-**

*******

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி K.பழனிசாமி அவர்கள் வாழ்த்துக்களுடன், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. ஓ.பன்னீர்செல்வம் அவர்கள், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் திரு. உடுமலை கே.ராதாகிருஷ்ணன் அவர்களின் முன்னிலையில், இன்று (11.12.2020) தேனி மாவட்டம், வீரபாண்டி - தப்புக்குண்டு கிராமத்தில், புதிய கால்நடை மருத்துவக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்திற்கான கட்டுமானப்பணிகளை துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள், தேனி பாராளுமன்ற உறுப்பினர் திரு.ப.ரவீந்திரநாத் அவர்கள், கம்பம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.டி.கே.ஜக்கையன், தமிழ்நாடு கால்நடை மருத்துவ பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர் சி.பாலசந்திரன் அவர்கள் மற்றும் பதிவாளர் முனைவர் பா.டென்சிங் ஞானராஜ் அவர்கள், தேனி மாவட்ட வருவாய் அலுவலர் க.ரமேஷ், பெரியகுளம் சார்ஆட்சியர் திருமதி.சினேகா, சென்னை முதன்மைத்தலைமை பொறியாளர் (கட்டிடங்கள்) ராஜ்மோகன், மதுரை தலைமைப்பொறியாளர் ரகுநாதன், தேனி கால்நடை மருத்துவக்கல்லூரி முதல்வர் முனைவர் அ.பழனிச்சாமி, தேனி ஆவின் சேர்மன் ஓ.ராஜா, மாவட்ட ஊராட்சித்தலைவர் ப்ரிதா மற்றும் துறைசார்ந்த அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

தேனி மாவட்டத்தில் தமிழக அரசால் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு நலத்திட்டங்கள் மூலம் பொதுமக்கள் பயன்பெற்று வருகின்றனர். அதுமட்டுமின்றி, மாவட்டம் முழுவதும் வளர்ச்சிப்பணிகளும் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதன்படி, தேனி அரசு மருத்துவக்கல்லூரி ரூ.40 கோடி மதிப்பீட்டிலும், பெரியகுளத்தில் அரசு செவிலியர் கல்லூரி ரூ.12 கோடி மதிப்பிலும், போடிநாயக்கனூர் அரசு பொறியியல் கல்லூரி ரூ.54.08 கோடி மதிப்பீட்டிலும், தேக்கம்பட்டி அரசு தொழில் நுட்ப கல்லூரி ரூ.25.39 கோடி மதிப்பீட்டிலும், வீரபாண்டி அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி ரூ.7.25 கோடி மதிப்பீட்டிலும், தொடங்கப்பட்டு சிறப்பாக நடைபெற்று வருகிறது. மேலும் தற்போது, அரசு சட்டக்கல்லூரி தொடங்கப்பட்டு, ரூ.89.01 கோடி மதிப்பீட்டில் கட்டட கட்டுமானப்பணிகளும் நடைபெற்று வருகிறது. இப்பணிகள் விரைவில் நிறைவு பெற்று வருகின்ற 2021-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் செயல்பட உள்ளது.

அதன்தொடர்ச்சியாக, மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் மேற்கொண்ட சீரிய நடவடிக்கையால், தேனி மாவட்டத்தில் புதிய கால்நடை மருத்துவக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் அமைத்திட கடந்த 20.03.2020 தமிழக சட்டப்பேரவையில் 110 விதியின் கீழ் அறிவிக்கப்பட்டது. அதனடிப்படையில், வீரபாண்டி கிராமத்தில் இடம் தேர்வு செய்யப்பட்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி K.பழனிசாமி அவர்கள் நேற்றைய தினம் (10.12.2020), மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. ஓ.பன்னீர்செல்வம் அவர்கள் முன்னிலையில், சென்னை தலைமைச்செயலகத்திலிருந்து காணொலிக்காட்சி வாயிலாக அடிக்கல் நாட்டினார்.

அதனைத்தொடர்ந்து, இன்றைய தினம் மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. ஓ.பன்னீர்செல்வம் அவர்கள், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் திரு. உடுமலை கே.ராதாகிருஷ்ணன் அவர்களின் முன்னிலையில், புதிய கால்நடை மருத்துவக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்திற்கான கட்டுமானப்பணிகளை துவக்கி வைத்தார்.

ஏழை எளிய மாணவ, மாணவியர்கள் அரசு கால்நடை மருத்துவ கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் பயின்று, பயன்பெறும் வகையிலும், தேனி மாவட்டத்தில் புதிய கால்நடை மருத்துவக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் நிறுவப்படுவதால், அண்டை மாவட்டங்களான மதுரை, விருதுநகர் மற்றும் திண்டுக்கலிலுள்ள கால்நடை மற்றும் கோழியின பண்ணையாளர்களின் தேவைகளை பூர்த்தி செய்திட இயலும் வகையிலும், மேலும் இக்கல்லூரி அமையவுள்ள இடம் கேரள மாநிலத்தின் எல்லையாக இருப்பதால், பால், இறைச்சி மற்றும் முட்டைகளை பதப்படுத்துதல், விற்பனை செய்தல் உள்ளிட்ட ஏராளமான வாய்ப்புகளுக்கும் அடிப்படையாக அமையவுள்ளன.

தேனி மாவட்டம் வீரபாண்டி கிராமத்தில் மொத்தம் ரூ.265.00 கோடி மதிப்பீட்டில் அமையவுள்ள அரசு கால்நடை மருத்துவ கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்திற்கு முதற்கட்டமாக முதலாம் ஆண்டிற்கு ரூ.94.72 கோடிக்கான நிதியினை தமிழக அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. மொத்தம் 253.64 ஏக்கர் பரப்பளவில் அமையவுள்ள இந்த அரசு கால்நடை மருத்துவ கல்லூரி, ஆராய்ச்சி நிலையம் கட்டிடத்தில், நன்கு வடிவமைக்கப்பட்ட நிர்வாகக் கட்டடம், நவீன வகுப்பறைகளுடன் கூடிய எட்டு கல்வித்தொகுதித் கட்டடங்கள், மாணவ மற்றும் மாணவியருக்கான தனித்தனி விடுதிகள், உணவகம், கல்லூரி முதல்வருக்கான குடியிருப்பு, விடுதிக் காப்பாளருக்கான குடியிருப்பு மற்றும் விருந்தினர் இல்லம், ஆகிய வசதிகள் உருவாக்கப்பட உள்ளது. மேலும், இக்கல்லூரியில் நவீன ஆய்வக வசதிகளுடன் கூடிய பால் மற்றும் இறைச்சிகளைப் பதப்படுத்தும் தொழில் நுட்ப நிலையங்கள் உட்பட 15 துறைகள், கால்நடை உற்பத்தி தொழில் நுட்பங்களை விவரிப்பதற்கான கால்நடை பண்ணை வளாகம் மற்றும் கால்நடை சிகிச்சை சார்ந்த பயிற்சி அறை

மாணவர்களுக்கு அளிக்கும் வகையில் நவீன வசதிகளுடன் கூடிய கால்நடை மருத்துவ சிகிச்சை மருத்துவமனை வளாகம் ஆகிய வசதிகள் ஏற்படுத்தப்படவுள்ளது.



மாணவ மாணவியர்களின் நலன்கருதியும் மற்றும் கால்நடை, கோழியின மேம்பாட்டில் ஆர்வமுள்ள விவசாயிகள், சிறுதொழில் செய்பவர்கள் திறனை மேம்படுத்திடவும் அடிப்படையாக அமைந்துள்ள இப்புதிய அரசு கால்நடை மருத்துவ கல்லூரி, ஆராய்ச்சி நிலையத்தின் கட்டுமானப்பணிகளை விரைவில் முடிக்கப்பட்டு, பயன்பாட்டிற்க்கு கொண்டுவர துறை சார்ந்த அலுவலர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. ஓ.பன்னீர்செல்வம் அவர்கள் அறிவுறுத்தினார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி.**